

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.6.2023) திருவாரூர் மாவட்டம், காட்டூரில் உள்ள கலைஞர் கோட்டத்திற்கு செல்லும் வழியில் பொதுமக்கள் மற்றும் குழந்தைகளிடம் உரையாடினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.6.2023) திருவாரூர் மாவட்டம், காட்டூரில் உள்ள கலைஞர் கோட்டத்திற்கு செல்லும் வழியில் பாரதி முதியோர் இல்லத்திற்கு நேரில் சென்று அவர்களிடம் நலம் விசாரித்தார்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, திருவாரூரில் கலைஞர் கோட்டம் திறக்கப்பட உள்ள நிலையில், திருச்சி தெற்கு மாவட்ட, கிழக்கு மாநகர மாவட்ட மாணவர் அணி சார்பில் திருச்சி சிந்தாமணி அண்ணா சாலையிலிருந்து சனிக்கிழமை கலைஞர் சுடர் தொடர் ஓட்டம் புறப்பட்டது. இதனை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு, பள்ளிக கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் தொடங்கி வைத்தனர் . இந்த சுடர் தொடர் ஓட்டமானது திருவெறும்பூர், துவாக்குடி, செங்கிப்பட்டி, வல்லம், தஞ்சாவூர், அம்மாபேட்டை, நீடாமங்கலம், கொரடாச்சேரி வழியாக திருவாரூரைச் சென்றடைகிறது. திருவாரூர் விழாவில் பங்கேற்கவுள்ள தமிழக முதல்வர் – கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் கலைஞர் சுடர் வழங்கப்பட உள்ளது என தி.மு.க. நிர்வாகிகள் தெரிவித்தனர். இந்த நிகழ்வில் மாநகரக் கழகச் செயலாளர் மதிவாணன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் முத்து வெங்கடேஷ், மாநகர மாணவரணி அமைப்பாளர் அசாருதீன், பகுதி கழகச் செயலாளர் மோகன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர் .



திருச்சிராப்பள்ளி கோர்ட்யார்ட் ஹோட்டலில் வாழ்ந்து காட்டுவோம் திட்டம், தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் சார்பில் நடைபெற்ற உற்பத்தியாளர் சந்தையாளர் ஒருங்கிணைப்பு 2023 நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை, வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மற்றும் ஊரகக் கடன்கள் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உற்பத்தியாளர் கூட்டமைப்பின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சியினை நேற்று (19.06.2023) துவங்கி வைத்து உற்பத்தி பொருட்களை பார்வையிட்டார். உடன் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மண்டலத் தலைவர்கள், அரசுத்துறை அலுவலர்கள் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

'ஜனநாயக விழுமியங்களை காப்பாற்ற' இருவரும் இணைந்தே நடைபோடுவோம்!

# ராகுல்காந்தி பிறந்தநாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!



சென்னை, ஜூன் 20-

காங்கிரஸ் கட்சி முன்னாள் தலைவர் ராகுல் காந்தி அவர் களின் பிறந்த நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் 'ஜனநாயக விழுமியங்களை காப்பாற்ற இருவரும் இணைந்தே நடைபோடுவோம்' என்று குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ராகுல் காந்தி அவர்களின் பிறந்த நாளையொட்டி வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**சகோதரர் ராகுல்காந்தி அவர்களுக்குப் பிறந்தநாள் நல்வாழ்த்துகள். இந்தியாவின் ஜனநாயக விழுமியங்களைக் காப்பாற்ற நம் முன் நெடும்பயணம் காத்திருக்கிறது. இருவரும் இணைந்தே நடைபோடுவோம்!**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது ட்விட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி தந்தை பெரியார் திராவிடர் கழகம் சார்பில் பொதுச் செயலாளர் கு.ராமகிருஷ்ணன் தலைமையில் கலைஞர் வேடம் அணிந்த தொண்டர்களின் ஊர்வலம் கோவையில் நடந்தது. நிகர் பறை இசை முழங்க கோவையில் கலைஞர் நூற்றாண்டு விழா பேரணி நடந்தது.

